# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.237/2020
Prosecution witness for P.W. 19 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. சிவ செந்தில்குமார் | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.03.2026.

Accuse present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது சேலம் இருப்புப்பாதை காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு 14.10.2018 அன்று முத்தையாபுரம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது உதவியாளர் அ.சா.18 பதிவு செய்து வைத்திருந்த அ.சா.ஆ.19 வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றே இரவு 7.30 மணியளவில் முத்தையாபுரம் ராஜீவ் நகர், முனியசாமி கோவில் அருகில் இருந்த பாலடைந்த வீடு அருகில் சம்பவ இடத்தை அ.சா.13,14 ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த மகஜர் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ.13. அந்த வரைபடம் **அசா.ஆ–20**. அன்றே சம்பவ இடத்தில் இருந்த இரத்தம்பட்ட சிமெண்ட் தரையின் துண்டு மற்றும் இரத்தம்படாத சிமெண்ட் தரையின் துண்டு, இரத்தம்பட்ட 2 சிறிய கற்கள் ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் இரவு 9.45 மணியளவில் மகஜரில் கைப்பற்றினேன். இந்த மகஜர் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ.14. மேற்படி இரத்தம்பட்ட கற்கள் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட **சா.பொ.1,2**. மேற்படி இரத்தம்பட்ட மற்றும்

இரத்தம்படாத சிமெண்ட் தரையின் துண்டுகள் **சா.பொ.6 மற்றும் 7**. பின்பு அ.சா.13, அ.சா.14, அ.சா.3, அ.சா.4, அ.சா.5, ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 15.10.2018 அன்று காலை 7 மணி முதல் 9 மணி வரையில் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சவகிடங்கில் இறந்துபோன முருகேசன் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து அறிக்கை தயாரித்தேன். அந்த அறிக்கை **அசா.ஆ. 21**. பிறகு அசா.1, அ.சா.2, மாரியம்மாள், அ.சா.7 ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பிறகு பிரேத பரிசோதனைக்காக பிரேதத்தை வேண்டுகோள் கடிதத்துடன் அ.சா.16 மூலம் மருத்துவரிடம் ஒப்படைத்தேன். அந்த வேண்டுகோள் கடிதம் **அ.சா.ஆ.22**. பிறகு எதிரிகளை தேடி வந்த நிலையில் முத்தையாபுரம் சாண்டி பொறியியல் கல்லூரிக்கு அருகில் பிரதான சாலையில் பகல் 10.30 மணியளவில் 3,4 எதிரிகளை அ.சா.6, அவரது உதவியாளர் சுமதி ஆகியோர் முன்னிலையில் கைது செய்து விசாரித்தபோது 3ம் எதிரி தானாக முன்வந்துகொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ.2. 4ம் எதிரியை விசாரித்தபோது 4ம் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையயில் பதிவு செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் .அதன் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ–8. அ.சா.ஆ–2 மற்றும் அ.சா.ஆ.8 ன் அடிப்படையில் 3,4 எதிரிகள் எங்களை மேற்படி கல்லூரிக்கு அருகில் உள்ள முள்புதருக்கு அழைத்து சென்று 3ம்எதிரி முள்புதரில் மறைத்து வைத்திருந்த அரிவாள், இரத்தக்கறை படிந்த வெளிர் பச்சை சட்டை ஆகியவற்றை ஆஜர்

செய்ததை அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ–3. 4ம் எதிரி மேற்படி முள்புதரில் இருந்து எடுத்து ஆஜர் செய்த இரத்தக்கறை படிந்த வெள்ளை சட்டையை அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அதற்கான குறிப்பு அசா.ஆ.3 மகஜரிலேயே உள்ளது. பின்னர் 3,4 எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரிகளை வழிக்காவல் மூலம் நீதிமனற் காவலுக்கு உட்படுத்தினேன். 17.10.2018 அன்று தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்து கொண்டிருந்த 1ம் எதிரியை அதே சாட்சிகள் முன்னிலையில் கைது செய்து விசாரித்தபோது 1ம் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். 21.10.2018 அன்று நான் விடுப்பில் இருந்ததால் பொறுப்பில் இருந்த ஆய்வாளர் திரு.முத்து 2ம் எதிரியை முத்தையாபுரம் பேருந்து நிறுத்தத்தில் அ.சா.8 மற்றும் 9 முன்னிலையில் கைது செய்து விசாரித்தபோது 2ம் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றார். அதன் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ– 23**. அதனடிப்படையில் தன்னிடம் இருந்த இரத்தக்கறை படிந்த சட்டையை 2ம் எதிரி ஆஜர் படுத்தியதை மேற்படி ஆய்வாளர் அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றார். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அசா.ஆ– 24**. மேற்படி சட்டை **சா.பொ.8**. பிறகு 2ம் எதிரியை நிலையம் கொண்டுவந்து வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்பு 20.11.2018 அன்று

வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் 1வது குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி பி.ஆர். எண்.173/2018 என்ற எண் பெறப்பட்டது. மேற்படி படிவங்கள் 91 **அ.சா.ஆ.25 வரிசை (எண்ணிக்கையில் 5).** வழக்கு சொத்துக்களை இரசாயண பரிசோதனைக்காக 27.11.2018 அன்று திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அ.சா.16 மூலம் அனுப்பினேன். பிறகு மேற்படி நீதிமன்ற தலைமை எழுத்தர் திரு.முருகானந்தம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு நட்சியல் அறிக்கை, உயிரியல் அறிக்கை, குருதி வடிநீரியல் அறிக்கை ஆகியவற்றை பெற்று அறிவியல் அலுவலர்களான விஜயேந்திரன் மற்றும் குருசாமி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி அறிக்கைகள் **அ.சா.ஆ–26 முதல் 28**. மேற்படி இரசாயண பரிசோதனைக்காக நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட கடிதம் **அ.சாஆ–29**. நான் நீதிமன்றத்திற்கு கொடுத்த வேண்டுகோள் கடிதம் **அ.சா.ஆ.30**. 21.12.2018 அன்று நான் விடுப்பில் இருந்த போது பொறுப்பு ஆய்வாளர் திருமதி.வனிதா என்பவர் 5ம் எதிரியை முள்ளக்காடு கோவளம் கடற்கரை பகுதியில் அ.சா.11 மற்றும் 12 ஆகியோர் முன்னிலையில் கைது செய்து விசாரித்தபோது 5ம் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவுசெய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றார். பிறகு சாட்சிகள் அந்தோணி சாமி, மூக்காண்டி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இருந்த வழக்கை இ.த.ச.294(பி),302,506(2) பிரிவுகளில் இருந்து இ.த.ச.147,148,342,352,506(2),302 உ/இ 149 பிரிவுகள் படி மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். அந்த அறிக்கை **அ.சா.ஆ.31**. இறந்துபோன முருகேசனுக்கு வழங்கப்பட்ட விபத்து

பதிவேட்டு நகல் **அசா.ஆ–32**. அவரது இறப்பு தகவல் மற்றும் மருத்துவமனை அனுமதி சீட்டு **அ.சா.ஆ–33**. மேற்படி முருகேசன் பிரேதத்தின் பிரேத பரிசோதனை சமயத்தில் அவர் உடலில் இருந்து எடுக்கப்பட்ட இரத்தக்கறை படிந்த கருப்பு நிற பேண்ட், இரத்தக்கறை படிந்த கருப்பு நிற முழுக்கை சட்டை, கருப்பு வெள்ளை சாம்பல் நிற கோடுபோட்ட கட்டம்போட்ட சாரம், இரத்தக்கறை படிந்த பிங்க் நிறத்தில் கோடுபோட்ட சட்டை, இரத்தக்கறை படிந்த வெள்ளை பனியன், நீல நிற டிரௌசர் மாடல் ஜட்டி, தேங்காய் நார் கயிறு ஒன்று, கருப்பு அரைஞாண் கயிறு ஆகியவை சா.பொ.9 முதல் 16. மேற்படி பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் அ.சா.15 ஐ விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். இறந்துபோனவருக்கு விபத்து பதிவேட்டு நகல் மருத்துவரான அனீஸ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு என் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இ.த.ச.147,148,342,352,506(2),302 உ/இ 149 பிரிவுகள் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை–**

சம்பவ சமயத்தில் இறந்துபோன முருகேசன் மது குடித்திருந்தார் என்றால் சரிதான். சம்பவத்தில் மேற்படி முருகேசன் 1ம் எதிரியை அரிவாளால் பலமுறை வெட்டி கொடுங்காயத்தை ஏற்படுத்தியதாக தெரிய வந்தது என்றால் சரிதான். அதனால் 1ம் எதிரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை எடுத்து வந்தார் என்றால் சரிதான். 1ம் எதிரிக்கு காயச் சான்றிதழ்கள் வாங்கினேனா என்றால்அதற்காக பதிவு செய்யப்பட்ட வழக்கில் இருக்கும். 1ம்எதிரியிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும் வழக்கும் பதிவு செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி முருகேசன் சம்பவ இடத்தில் இருந்து

ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டார். ஆம்புலன்ஸில் இறந்துபோனவருக்கு தெரிந்த நபரும் அவருடன் வந்துள்ளார் என்றால் சரிதான். முருகேசனுடன் வந்தவர்தான் முருகேசனுக்கு எங்கு எப்படி காயம்பட்டது என்பதை மருத்துவரிடம் சொன்னார். முருகேசனுடன் வந்தவர் சாமிநகரில் சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளாரா என்றால் முனியசாமி கோவில் அருகில் ராஜீவ் நகரில் சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளார். இறந்துபோனவருக்கான விபத்து பதிவேட்டு நகலில் சாமிநகர் முள்ளக்காடு என்று சொல்லப்பட்டது என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகார் மனுவில் 1ம் எதிரிக்கு தலை, வலது தோள்பட்டை, இடதுகை புஜம், வலது மணிக்கட்டு, தலையின் வலதுபுறம் ஆகிய பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம்எதிரி இறந்துபோன நபரின் உடலில்எங்கு வெட்டினார் என்பது புகாரில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புகாரில் இறந்துபோன நபருக்கு உடலில் எந்த பகுதியில் காயம் ஏற்பட்டது என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரிக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரிக்கவில்லை என்றும் 1ம் எதிரிக்கு எங்கெங்கு காயம் இருந்தது என்று காயச்சான்று வாங்கவில்லை என்றும் அந்த விவரங்கள் 1ம் எதிரி கொடுத்த புகார் வாக்குமூலத்தில் மறைக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. 2,3 எதிரிகள் சம்பவ இடத்தில் இருந்து 15 கி.மீ தள்ளி வசிக்கிறார்கள் என்றால் சரிதான். 4,5 எதிரிகளுக்கும் இறந்துபோனவருக்கும் முன்விரோதம் இருந்ததாக வழக்கு ஆவணங்களில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பிரேத பரிசோதனை அறிக்கையில் இறந்துபோனவருக்கு வெட்டுக்காயங்கள் இல்லை என்றால் சரிதான். 5 சிதைந்த காயங்களும் 10 சிராய்பு காயங்களும் 3 வீக்க காயங்களும் இருந்ததாக பிரேத பரிசோதனை

அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறந்துபோன நபர் குடிபோதையில் இருந்ததாக நச்சுயியல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சா.பொ.1 அரிவாளில் இரத்தக்கறை இல்லை. 3ம்எதிரியிடம் பதிவு செய்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சா.பொ.3 அரிவாள் கைப்பற்றப்பட்டது. 4ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஒரு அரிவாள் கைப்பற்றப்பட்டதாக காட்டியிருக்கிறேன் என்றால் சரிதான். 3,4 எதிரிகள் ஒரு அரிவாளைதான் இருவரும் சேர்ந்து மறைத்து வைத்ததாக சொல்லி இருவரும் எடுத்துகொடுத்தார்கள். ஆனால் இருவரும் தனித்தனியான அரிவாள்களை எடுத்துகொடுத்ததாக கைப்பற்றுதல் மகஜர் தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இரசாயண பரிசோதனைக்கு வழக்கு சொத்துக்களை அனுப்பிய தேதி 27.11.2018. வழக்கு சொத்தை கைப்பற்றி ஒரு மாதத்திற்கு மேல் இரசாயண பரிசோதனைக்கு அனுப்பினேன் என்றால் சரிதான். ஒருமாத காலத்தில் சான்று பொருட்களை எதிரிகளுக்கு பாதகமாக மாற்றுவதற்கோ அழிப்பதற்கோ வாய்ப்பு உள்ளது என்றால் சரியல்ல. உள்ளுறுப்புகளையும் வழக்கு சொத்துக்களையும் எவ்வளவு விரைவாக அனுப்ப முடியுமோ அவ்வளவு விரைவாக ஆய்வகத்திற்கு அனுப்ப வேண்டும் என்று அறிவுறுத்தல் உள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்திலும் சொன்ன விதத்திலும் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் நான் முறையான புலன் விசாரணை செய்யவில்லை என்றும் நிலையத்திலேயே அமர்ந்து கொண்டு ஆவணங்களையும் சான்று பொருட்களையும் உற்பத்தி செய்து எதிரிகள் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இறந்துபோன நபர்தான் சாமிக்கு மாலை போட்டுக்கொண்டு

படுபாதக கொலை செய்ய முயற்சி செய்ததால் அங்கிருந்த பொதுமக்கள் பொருத்து கொள்ளமுடியாமல் அவரை கல்லால் தாக்கி அவர் கீழே விழுந்து இறந்துவிட்டார் என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN

Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.03.06 18:10:53 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.